வேண்டிய ஒன்றுதான். அந்த அளவிற்குப் பொது மக்களிடத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் இதற்கு ஒத்துப் போகிற ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய சொத்து என்று சொன்னால் அந்தச் சொத்தை யாராவது எடுத்துச் செல்வதற்கோ அல்லது அதை நாசப்படுத்துவதற்கோ முயற்சி எடுக்கிறபொழுது ஏன் என்று தட்டிக் கேட்கிற ஒரு நிலை என்றைக்கு இந்த நாட்டிலே உருவாகிறதோ அன்றைக்கு இது எல்லாம் வெற்றிகரமாக முடியும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 504—திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

504—

பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு.

*11769— திரு. ப. ரங்கநாதன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவ மனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர் புறநகர், மருத்துவ மனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இப்பொழுது இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. ப. ரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, புறநகர் மருத்துவமனையை உருவாக்கிய நோக்கம், பொது மருத்துவமனைகளில் பெருகி வருகின்ற எண்ணிக்கையைக் குறைப்பதற்காகப் புறநகர் மருத்துவமனையை உருவாக்கி உள்ளீர்கள். ஆனால், புறநகர் மருத்துவமனையை மிகப் பெரிய தொகையினை

முதலீடு செய்து உருவாக்கிய பின்பும், அந்த மருத்துவமனையை முழுமையாகப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவிற்கு அங்கே போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் நரம்பியல் பிரிவினை அங்கே ஆரம்பிக்கலாம்; அல்லது வேறு எந்த சிறப்புப் பிரிவினையாவது அங்கே ஆரம்பித்தால் நலமாக இருக்கும் என்பதை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பொதுவான நோயாளிகளைப் பார்ப்பதோடு, 5 சிறப்புப் பிரிவுகளில் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் அங்கே மருத்துவர்கள் வருகிறார்கள். எனவே, தனியாக நிரந்தரமாக அதை அங்கே ஆரம்பிக்கிற வாய்ப்பு இல்லை. நரம்பியல் பிரிவிலேகூட ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர் மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். எனவே, அதைத் தொடர்ந்து செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நாட்களுக்கும் 5 சிறப்புப் பிரிவுகளும் அங்கே செயல்படுகின்றன. ஆனால், மருத்துவமனையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அந்தப் பகுதியிலே இருப்பவர்கள், சுற்றுப்புறத்திலே இருப்பவர்கள், புறநகர்ப் பகுதிகளிலே வாழ்பவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு நரம்பியல் பிரிவு இல்லையென்றாலும், அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் செயல்படுகிற வகையில் ஒரு பிரிவினை அங்கே தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தொடர்ந்து 24 Hours மருத்துவர்கள் இருப்பார்கள். அங்கே அவசர சிகிச்சைக்கு வரக்கூடியவர்களைப் பார்ப்பதற்கான Casuality-யில், டாக்டர்கள் இருப்பார்கள். எனவே, அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லையென்று கருதுகிறேன். அப்படி இல்லாமல் இருந்தால், அது பற்றி ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 505—டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.